# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8078896

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : Coimbatore PS: Vigilance and Anti Corruption Coimbatore Year: 2021 FIR No.: 02/2021 Date: 08.01.2021
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7(a) of PC Act as
(ii) Act சட்டம்: Prevention of Sections பிரிவுகள்: amended by PC
(iii) Act சட்டம்: Corruption Act 1988 Sections பிரிவுகள்: (Amendment) Act 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : After 4 days from the date of application Date to : 6.1.2021 at about
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to : 06.30 PM
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 7.1.2021 i.e. on 3.12.2020 Time : at 07.45 AM
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 7.1.2021 Time : 07.45 AM
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Typed Tamil
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Arul Garden Pothivalan colony Sundarapuram Coimbatore
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : and Sundarapuram Tax collection office approximately 14 kms South
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : K. Senthil Kumar (b) Father's/ Husband's Name : Kandasamy
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 37 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Software Engineer (g) Address : 9 A, Arul Garden, Pothivalan colony, Sundarapuram, Coimbatore
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
(1) Gouse moideen Bill Collector, 97 ward, Coimbatore corporation South zone Coimbatore
(2) Dhanapal Assistant

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

——

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..................................... ...........on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 07/01/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 7.1.2021
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 7-1-2021 —
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் C.M.V.Jagadeeshwari
Rank: நிலை ....................No. எண் ..........
Inspector

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.2/2021/AC/CB, u/s.7(a) of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

07.01.2021ம் தேதி வியாழக்கிழமை காலை 07.45 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது K.செந்தில்குமார் வயது-37, த/பெ.கந்தசாமி, 9A அருள்கார்டன், பதிவாளர் காலனி, சுந்தராபுரம், கோயம்புத்தூர் என்பவர் கணினியில் தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகாரினை கோயம்புத்தூர் மாவட்டம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்தார். அந்த புகாரின் அடிப்படையில் எதிரிகளின் நற்பெயர் குறித்து ரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரிகளின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகாரில் சொல்லப்பட்டது போல் புகார்தாரிடம் திரு.கௌஸ் மொய்தீன், பில் கலெக்டர், கோவை மாநகராட்சி தெற்கு மண்டல அலுவலகம், குனியமுத்தூர், கோயம்புத்தூர் மற்றும் திரு.தனபால், உதவியாளர் ஆகியோர் புதிய வீட்டிற்கு சொத்து வரி நிர்ணயம் செய்வதற்காக லஞ்சமாக பணம் கேட்டது தெரிய வந்தது. மேலும் புகார்தாரரின் முன் நடத்தை மற்றும் புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உள்ளதா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் அவரது புகார் நம்பகதன்மை கொண்டது என்றும் தெரியவந்ததால் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 07.01.2021ம் தேதி காலை 08.30 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக குற்ற எண் 2/2021/AC/CB, u/s.7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி மேற்படி எதிரிகள் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. அனுப்புநர் K.செந்தில்குமார் வயது 37 S/O கந்தசாமி, 9A அருள் கார்டன் பதிவாளர் காலனி, சுந்தராபுரம் கோவை பெறுனர் ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கவுண்டம்பாளையம் கோவை அய்யா, நான் கோயம்புத்தூர், சுந்தராபுரம் அருள் கார்டன், பதிவாளர் காலனியில், 9A என்ற முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் Software Engineer-ஆக பணிபுரிந்து வருகிறேன். நான் மேற்படி முகவரியில் சுமார் 2000 சதுர அடியில் தரைதளம் மற்றும் முதல் தளத்துடன் புதிதாக வீடு கட்டி அதில் தற்சமயம் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் குடியிருக்கும் வீடு கோவை மாநகராட்சி தெற்கு, 97 வது வார்டில் உள்ளது. எனது புதிய வீட்டிற்கு சொத்து வரி நிர்ணயம்

செய்வதற்காக நான் கடந்த 03.12.2020-ம் தேதி குனியமுத்தூரில் உள்ள கோவை தெற்கு மாநகராட்சி அலுவலகத்திற்கு சென்று விண்ணப்பம் கொடுத்து அதற்கான ரசீதையும் பெற்றுக்கொண்டேன். பின்பு சுமார் 4 நாட்கள் கழித்து காலை சுமார் 11.00 மணியளவில் இரண்டு நபர்கள் வந்து என்னிடம் அவர்கள் 97 வது வார்டின் பில் கலெக்டர் என்றும் மற்றொருவர் அவருடைய உதவியாளர் என்று சொல்லி எனது வீட்டிற்கு வந்து வீட்டை அளந்தார்கள். அப்போது 97 வது வார்டின் பில் கலெக்ட்டரும் அவருடன் வந்திருந்த உதவியாளரும் நீங்கள் அனுமதிக்கு கூடுதலாக வீடு கட்டியிருக்கீங்க, அதற்கு நீங்க Fine கட்டணும், நாங்க Fine இல்லாமல் உங்களுக்கு சொத்துவரி நிர்ணயம் செய்து கொடுத்து விடுகிறோம் அதற்கு நீங்க எங்களுக்கு 30,000/- ரூபாய் பணம் தனியா கொடுத்துட்டீங்கனா Fine எதுவும் போடாமல் சொத்துவரியை நிர்ணயம் செய்துவிடுவதாக உதவியாளரும், பில்கலெக்டரும் சொன்னார்கள். அதற்கு நான் சொத்து வரி விதிக்க அவ்வளவு பணம் கொடுக்க வேண்டுமா என்று கேட்டு, என்னிடம் தற்சமயம் அவ்வளவு பணம் இல்லை பணத்தை ரெடி செய்த பின் சொல்லுகிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர்கள் பணத்தை ரெடிசெய்துவிட்டு எங்களை கூப்பிடுங்கள் என்று சொல்லி உதவியாளரென தெரிவித்த நபர் தனது பெயர் தனபால் என்று சொல்லி 86087 11745 என்ற செல்நம்பரை என்னிடம் கொடுத்து கூப்பிட சொன்னார். அதன் பின்பு நான் 97 வது வார்டின் பில்கலெக்டரின் பெயர் கௌஸ் மொய்தீன் என்று விசாரித்து தெரிந்துகொண்டேன். அவர்கள் கொடுத்த போன் நம்பரிலிருந்து என்னை அடிக்கடி தனபால் கூப்பிட்டு பணம் ரூ.30,000/-த்தை ரெடிபண்ணிட்டீங்களா என்று தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருந்தார். அதற்கு நான் பணம் ரெடியாகல, பணம் ரெடிபண்ணிட்டு கூப்பிடுகிறேன் என்று சொன்னேன். பணம் ரெடிபண்ண முடியாததால் சில சமயங்களில் அவர்கள் கூப்பிடும்போது நான் போனை அட்டண்ட் செய்யவில்லை. கடந்த 28.12.2020ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் அவர்கள் கொடுத்த மேற்படி நம்பரிலிருந்து என்னை கூப்பிட்டு பணம் ரெடியாகிவிட்டதா பில் கலெக்ட்டர் கேட்கிறார் என்று உதவியாளர் கேட்டார். நான் இன்னும் பணம் ரெடியாகவில்லை என்று சொன்னேன். அப்போது போனில் பேசியவர் நாங்க ரொம்பநாள் உங்க பைலை பெண்டிங் வைத்திருக்க முடியாது என்றும் அதனால் நாங்க பெனால்ட்டி போடுகிறோம் என்று சொன்னார். நானும் சரி பெனால்ட்டி போடுங்கள் என்று சொன்னேன். பின்பு நான் 4.01.2021 ம் தேதி மேற்படி செல்நம்பருக்கு நான் போன் செய்து பெனால்ட்டி போட்டாச்சா என்று கேட்டேன். அதற்கு உதவியாளர் பெனால்ட்டி போட்டாச்சு என்றும் அதை கட்டினால் தான் சொத்து வரி போடமுடியும் என்று சொன்னார்கள். நான் 5.1.2021 ம் தேதி குனியமுத்தூர் தெற்கு கார்ப்பரேசன் அலுவலகம் சென்று பெனால்ட்டி பணம் கட்டுவதற்காக பணம் செலுத்துமிடத்திற்கு சென்று விபரம் சொன்னேன். அப்போது அங்கிருந்தவர்கள் பில்கலெக்டரிடம் நம்பர் வாங்கி வந்தால்தான் பணம் கட்டமுடியும் என்று சொன்னார்கள். நான் மேற்படி 97 வார்டின் பில் கலெக்டரை

பார்த்து நம்பர் வாங்குவதற்காக ஆபீசுக்குள் சென்று பார்த்தபோது அவர் அங்கில்லை. பின்பு நான் மதியம் சுமார் 12.30 மணியளவில் அவர்கள் கொடுத்த 8608711745 என்ற செல்நம்பருக்கு கூப்பிட்டு கார்பரேஷன் அலுவலகத்தில் பெனால்ட்டி கட்ட நம்பர் கேட்ட விவரத்தை சொன்னேன். அப்போது அவர்கள் அரைமணி நேரத்திற்குள் சுந்தராபுரம் வரிவசூல் மையத்திற்கு வருவதாக சொன்னதால் நான் சுந்தராபுரம் வரி வசூல் மையத்திற்கு சென்று சுமார் ஒரு மணிநேரமாக காத்திருந்தேன். அதன்பின்பு மதியம் சுமார் 2.10 மணிக்கு எனது வீட்டிற்கு வருவதாக போனில் தகவல் சொன்னார்கள். நான் வீட்டிற்கு சென்று காத்திருந்தேன் ஆனால் அவர்கள் வரவில்லை. பின்னர் 6.1.2021 ம் தேதி காலை சுமார் 10.45 மணிக்கு அவர்கள் கொடுத்த மேற்படி செல்நம்பருக்கு போன் செய்தேன். அவர்கள் எனது வீட்டிற்கு வருவதாக சொன்னார்கள். பின்பு சுமார் 5 நிமிடம் கழித்து எனக்கு போன் செய்து சுந்தராபுரம் வரிவசூல் மையத்திற்கு வாங்க என்று சொன்னதால் சுமார் 11 மணியளவில் நான் அங்கு சென்றேன். மேற்படி இருவரும் அங்கு வந்து என்னிடம் 5.1.2021ம் தேதி வேறு இடத்திற்கு சென்றுவிட்டதால் வரமுடியவில்லை என்று சொன்னார்கள். பின்பு அவர்கள் நான் கட்டவேண்டிய ரூ.5,020/-க்கு பெனால்ட்டி நோட்டீஸ் கொடுத்தார்கள். பெனால்ட்டி தொகையை கட்டிவிடட்டுமா என்று கேட்டபோது பில் கலெக்டர் என்னை கட்டவேண்டாம் என்றும் நாங்கள் பெனால்ட்டி ரூ.5,020/- போட்டுவிட்டதால் ஏற்கனவே கேட்ட தொகை ரூ.30,000/-த்தில் பெனால்ட்டிக்கான தொகை போக மீதி ரூ.25,000/-ஐ ரெடிபண்ணிவிட்டு சொல்லுங்க, அப்புறம் ரெண்டு தொகையையும் எங்ககிட்ட கொடுங்கள் நாங்க கட்டிவிடுகிறோம் என்று சொன்னார்கள். அதற்கு நான் நீங்க கேட்ட தொகை ரொம்ப அதிகமாக இருக்கு இன்னும் பிள்ளைகளுக்கு பீஸ் கூட கட்டவில்லை கொஞ்சம் கம்மி பண்ணுங்கண்ணா என்று கேட்டேன். மேலும் அவர்களிடம் பெனால்ட்டியும் போட்டுட்டீங்க நீங்க தனியாக கேட்ட தொகையிலிருந்து கொஞ்சம் கம்மி பண்ணுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர்கள் ஒத்துக்கொண்டு அவர்கள் கேட்ட தொகையிலிருந்து முதலில் ரூ.5000/- குறைத்துக் கொண்டார். நான் மீண்டும் எனது இயலாமையை எடுத்து சொன்னதால் மறுபடியும் ரூ.2000/- குறைத்து கொள்கிறேன் என்று சொன்னார். மொத்தம் ரூ.7,000/-ஐ குறைத்துக்கொண்டு ரூ.18,000/- ரூபாய் தனியாக கொடுங்கள் என்று கேட்டார்கள். நான் final ஆக பில் கலெக்டரிடம் கொஞ்சம் கம்மி பண்ணுங்கண்ணா சொன்ன போது அவர் ரூ. 18,000/-ஐ ரெடி பண்ணீருங்க அதை விட கம்மி பண்ண முடியாது என்று சொன்னார். மேலும் அவர் என்னை மாலை போன் செய்து எங்கு வரவேண்டும் என கேட்டு தெரிந்து கொள்ள சொன்னார். நான் மேற்படி செல்நம்பருக்கு மாலை சுமார் 6.30 மணிக்கு போன் செய்தபோது உதவியாளர் தனபால் ரெண்டு பணத்தையும் ரெடிபண்ணிட்டு இன்று காலை போன் பண்ணுங்க நாங்க வீட்டிற்கு வருகிறோம் என்று சொன்னார். அவர்கள் கொடுத்த பெனால்ட்டி நோட்டீஸ் நான் பார்த்தபோது அதில் ந.க.எண்.8259/2020/A3 அ எனவும் நாள் குறிப்பிடப்படாமலும்

இருந்தது. மேற்படி ரசீதில் தெற்கு மண்டல உதவி ஆணையாளருக்காக என்று கையொப்பமிடப்பட்டிருந்தது. அதன் கீழ் 28.12.2020 தேதியிட்ட கையொப்பமும் இருந்தது. நான் யோசித்துபார்த்ததில் கார்ப்பரேசனுக்கு கட்டவேண்டிய பெனால்ட்டி ரூ.5,020/-ஐ செலுத்த தயாராக உள்ளேன். ஆனால் 97 வது வார்டின் பில் கலெக்டர் கௌஸ் மொய்தீன் மற்றும் அவரது உதவியாளர் தனபால் ஆகியோருக்கு ரூ.18,000/- லஞ்சம் கொடுத்து சொத்து வரி நிர்ணயம் செய்ய எனக்கு விருப்பமில்லை. எனவே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். பில் கலெக்டர் எனக்கு வழங்கிய பெனால்ட்டி நோட்டீசின் நகலை இத்துடன் இணைத்துள்ளேன். இப்படிக்கு, sd/-(xxxx) 07.01.2021 (K.Senthil Kumar). Madam, Received the complaint on 07.01.2021 at 07.45 hrs sd/-(xxxx) 07.01.2021 (M.Vijiyalakshmi), Inspector of Police, V&AC, Coimbatore. Madam, After conducting discreet enquiry a case in Coimbatore V&AC Cr.No.2/2021/AC/CB u/s.7(a) of the PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 was registered by me on 07.01.2021 at 08.30 hrs sd/-(xxxx) 07.01.2021 (M.Vijiyalakshmi), Inspector, VAC, Cbe. முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார் மனு மற்றும் பெனால்ட்டி நோட்டீசின் நகல் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

(M.விஜயலட்சுமி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.